# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:98** **தேதி:-17.02.2016**

## விரிவடைந்த மாநில செயற்குழு முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

எதிர்வரும் 7ஆவது சரிபார்ப்பு தேர்தல் தொடர்பாக விவாதிக்க தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கத்தின் விரிவடைந்த மாநில செயற்குழு வேலூர் PATC மஹாலில் நமது அகில இந்திய உதவி பொது செயலாளரும், தமிழ் மாநில தலைவருமான தோழர் S.செல்லப்பா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விரிவடைந்த மாநில செயற்குழுவில் மாநில செயற்குழு உறுப்பினர்களுடன் 200க்கும் மேற்பட்ட கிளை செயலாளர்களும் பங்கேற்றனர்.

விரிவடைந்த மாநில செயற்குழுவில் தேசியக் கொடியினை மதுரை மாவட்ட செயலாளர் தோழர் S.சூரியன் அவர்களும், நமது சங்க கொடியினை தமிழ் மாநில உதவி தலைவர் தோழர் V.வெங்கட்ராமன் அவர்களும் விண்ணதிரும் கோஷங்களுக்கு இடையே ஏற்றி வைத்தனர். BSNL ஊழியர் சங்கத்தின் தமிழ் மாநில அமைப்பு செயலாளர் தோழர் R.M.கிறிஸ்டோபர் அஞ்சலி உரை நிகழ்த்த அவை ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தியது. BSNL ஊழியர் சங்கத்தின் உதவி மாநில செயலாளர் தோழர் S.சுப்ரமணி வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

தமிழ் மாநில தலைவர் தனது தலைமையுரையில் தமிழகத்தில் 7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் முதன்மை சங்கமாக வர நாம் அனைவரும் திட்டமிட்டு உழைத்திட வேண்டும் என்றும் சென்னையில் நடைபெற உள்ள அகில இந்திய மாநாட்டினை அனைவரும் பாராட்டும் வண்ணம் நடத்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். 12.02.2016 அன்று நடைபெற்ற மாநில செயற்குழுவின் முடிவுகளை தமிழ் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் விரிவடைந்த மாநில செயற்குழுவிற்கு விவரித்தார்.

இந்த விரிவடைந்த மாநில செயற்குழுவை துவக்கி வைத்த BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு அவர்கள் மிகச்சிறப்பான எழுச்சியுரை ஆற்றினார். BSNLன் தற்போதைய நிலைமை, அதனை பாதுகாத்திட நமது மத்திய சங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் ஊழியர்களாகிய நாம் செய்ய வேண்டிய பணிகள் ஆகியவற்றை தெளிவாக எடுத்துரைத்தார். அரசின் பொதுத்துறை விரோத கொள்கைகளை எடுத்துரைத்து பொது துறைகளை பாதுகாக்க நடைபெறும் இயக்கங்களில் நமது பங்கேற்பினை வலியுறுத்தி பேசினார். மேலும் BSNLல் உள்ள ஊழியர்களின் தீர்வு கண்ட பிரச்சனைகள் தொடர்பாகவும், நிலுவையிலுள்ள பிரச்சனைகளின் தீர்விற்காக நமது சங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் மிக விரிவான விளக்க உரை ஆற்றினார். BSNLஐ பாதுகாக்க, BSNL ஊழியர்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண, 01.01.2017 முதல் நடைபெற வேண்டிய ஊதிய மாற்றத்தில் நல்லதொரு முன்னேற்றம் கண்டிட BSNL ஊழியர் சங்கம் வெற்றி பெற வேண்டியதின் அவசியம் பற்றியும் அவர் விவரித்தார். தமிழகத்தில் இந்த முறை முதன்மை சங்கமாக வர வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர் அதற்காக

அனைத்து தோழர்களும் சிறப்புடன் பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவரது உரை வந்திருந்த அனைவருக்கும் ஒரு தெளிவினை, உத்வேகத்தினை ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகையாகாது.

பின்னர் நடைபெற்ற விவாதத்தில் 18 மாவட்டங்களையும் சேர்ந்த 23 கிளை செயலாளர்கள் பங்கேற்றனர். தங்கள் மாவட்டத்தில் உள்ள வெற்றி வாய்ப்புகளையும், தாங்கள் ஆற்றவுள்ள பணிகள் தொடர்பாகவும் தெளிவான சிந்தனையுடன் அனைத்து தோழர்களும் பேசியது சிறப்பம்சமாகும்.

தோழர்களின் விவாதத்திற்கு பதில் அளித்து மாநில செயலாளர் உரை நிகழ்த்திய பின்னர் நமது அகில இந்திய உதவி பொது செயலாளர் தோழர் S.செல்லப்பா நிறைவுரை ஆற்றினார்.

7ஆவது சங்க அங்கீகார தேர்தலில் தமிழகத்திலும் நாம் முதன்மை சங்கமாக வருவதை உறுதி செய்வதற்காக நடைபெற்ற இந்த செயற்குழுவை வளர்ந்து வரும் மாவட்டமாக இருந்த போதும் வேலூர் மாவட்டம் ஒரு பத்து நாட்கள் இடைவெளியில் சிறப்பாக செய்திருந்தது. ஒரு குறுகிய இடைவெளியில் ஒரு மாநில செயற்குழுவையும், ஒரு விரிவடைந்த மாநில செயற்குழுவையும் திட்டமிட்டு சிறப்பாக செய்திட்ட வேலூர் மாவட்ட தோழர்களின் பணியினை பொது செயலாளர் முதற்கொண்டு அனைத்து தோழர்களும் பாராட்டினர். அனைத்து தோழர்களையும் கௌரவிக்கும் வகையில் வேலூர் மாவட்ட BSNL ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் தோழர் S.தங்கவேல், AIBDPA பொறுப்பாளர் தோழர் C.ஞானசேகரன் மற்றும் TNTCWU மாவட்ட செயலாளர் தோழர் சதீஷ் ஆகியோருக்கு தமிழ் மாநில சங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததுடன் விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழு அவர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டது.

மிகவும் எழுச்சியுடன் நடைபெற்ற இந்த விரிவடைந்த தமிழ் மாநில செயற்குழுவை வேலூர் மாவட்ட செயலாளர் தோழர் S.தங்கவேல் நன்றி கூறி முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**